தினகரன் 13.12.2018 ● வியாழக்கிழமை 15
நெல்லை மாநகர்

# மகளிர் விழிப்புணர்வு கருத்தரங்கு



செல்போன், பேஸ்புக் உள்ளிட்ட வலைதளங்களில் மகளிருக்கு வரும் தவறான அழைப்புகளை தடுப்பது குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு பாளை சாரதா மகளிர் கல்லூரியில் நடந்தது. இதில் மாணவிகள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

திருநெல்வேலி
வியாழன் ● டிசம்பர் 13 2018
www.dinamalarnellai.com
தினமலர்
நெல்லை

# சாரதா கல்லூரியில் விழிப்புணர்வு கருத்தரங்கு



பாளை., சாரதா மகளிர் கல்லூரியில் "டிஜிட்டல் எழுத்தறிவு மற்றும் ஆன்லைன் பாதுகாப்பு திட்டம்" குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது.

திருநெல்வேலி, டிச. 13–

சாரதா மகளிர் கல்லூரியில் உள்தர உத்தரவாத செல் மற்றும் பெண்கள் செல், டிஜிட்டல் ஷக்தி அமைப்பு நாகர்கோவில் உடன் இணைந்து நேற்று "டிஜிட்டல் எழுத்தறிவு மற்றும் ஆன்லைன் பாதுகாப்பு திட்டம்" குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கு நடை பெற்றது.

கல்லூரி முதல்வர்மலர்விழி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி நிர்வாகிபக்தானந்தா மஹராஜ் மற்றும் கல்லூரி செயலர் யத்தீஸ்வரி சரவணபவப்ரியா ஆசியுரை வழங்கினர்.

புர்னேண்டு சிங், நிர்வாகி சைபர் பீஸ் பவுண்டேஷன், ராஞ்சி, ஜார்க்கண்ட், அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

ஆன்லைன் செயல்பாடுகளில் மாணவிகளின் பங்களிப்பு, மேற்கொள்ள வேண்டிய முறைகள் மற்றும் டிஜிட்டல் துறையின் நன்மை, தீமைகளைப் பற்றி விரிவாக விளக்கினார்.

கருத்தரங்கில் 1700 கல்லூரி மாணவிகள் மற்றும் 85 பேராசிரியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

கல்லூரி பேராசிரியர்கள் அருணா தேவி, சங்கீதா மற்றும் கஜலட்சுமி ஆகியோர் ஒருங்கிணைந்து கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

செல்வபாரதி இரண்டாம் ஆண்டு முதுகலை வணிகவியல் துறை மாணவி நன்றியுரை வழங்கினார்.